# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

பதிவு எண் : 10420

## பத்தாம் வகுப்பு

## சமூக அறிவியல்

நேரம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

பகுதி - அ

7 x 1 = 7

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந் தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது?
   அ) சீனா   ஆ) கொரியா   இ) ஜப்பான்   ஈ) மங்கோலியா
2. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?
   அ) ஜெர்மனி   ஆ) ரஷ்யா   இ) போப்   ஈ) ஸ்பெயின்
3. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ________.
   அ) பாபர்   ஆ) தராய்   இ) பாங்கர்   ஈ) காதர்
4. இந்தியாவின் காலநிலை ________ ஆக பெயரிடப்பட்டுள்ளது.
   அ) அயன மண்டல ஈரக் காலநிலை
   ஆ) நிலநடுக்கோட்டுக் காலநிலை
   இ) அயன மண்டல பருவக்காற்றுக் காலநிலை
   ஈ) மித அயன மண்டலக் காலநிலை
5. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது?
   அ) ஒருமுறை   ஆ) இருமுறை
   இ) மூன்று முறை   ஈ) எப்போதும் இல்லை
6. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது.
   அ) வேளாண்மை   ஆ) தானியங்கிகள்   இ) வர்த்தகம்   ஈ) வங்கி
7. 1632 இல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மான்" வழங்கியவர் யார்?
   அ) ஜஹாங்கீர்   ஆ) கோல்கொண்டா சுல்தான்
   இ) அக்பர்   ஈ) ஔரங்கசிப்

பகுதி - ஆ

5 x 2 = 10

II. எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளி.

8. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
9. இந்தோ-சீனாவில் நடைபெற்ற "வெள்ளை பயங்கரவாதம்" குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
10. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.
11. "பருவமழை வெடிப்பு" என்றால் என்ன?
12. நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன?
13. உச்ச நீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?
14. நாட்டு வருமானம் - வரையறு.
15. உலகமயமாக்கலின் வகைகளை எழுதுக.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பகுதி - இ

III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி. 5 x 5 = 25

16. முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவாதி.

17. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.

18. இமயமலையின் உட்பிரிவுகளையும், அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.

19. *வேறுபடுத்துக* :

அ) வானிலை மற்றும் காலநிலை.

ஆ) மேற்கு தொடர்ச்சி மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்.

***காரணம் கூறு*** :

மழை நீர் சேமிப்பு அவசியம்.

20. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

21. இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?

22. நாட்டு வருமானத்தைக் கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துகளை விவரி.

23. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.

24. 1900 முதல் 1930 வரையிலான உலக வரலாற்று நிகழ்வுகள் ஐந்தினைக் காலக்கோட்டில் குறிக்கவும்.

பகுதி - ஈ

IV. வரைபடம்: 4 x 1 = 4

25. ***உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.***

அ) இங்கிலாந்து

ஆ) ரஷ்யா

இ) இத்தாலி

ஈ) ஜெர்மனி

26. ***இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.*** $8 \times {}^{1}/_{2} = 4$

அ) தக்காண பீடபூமி ஆ) $K_2$ சிகரம்

இ) மேற்கு தொடர்ச்சிமலை ஈ) வடகிழக்கு பருவக்காற்று

உ) சுந்தரவனம் ஊ) பாலை மண்

எ) காவிரி டெல்டா ஏ) கங்கை ஆறு

******

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com